செய்தி வெளியீடு எண்: 04-2017 நாள்: 01.12.2017

# விழுப்புரம் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 52 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24,57,120/- மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரங்கள் பொருதத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் நவீன செயற்கை கால்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 52 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24,57,120/- மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரங்கள் பொருதத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் நவீன செயற்கை கால்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (01.12.2017) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 2016-17ம் நிதியாண்டிற்கு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் பொது நிதி திட்டத்தின்கீழ் 32 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.18,82,880/- மதிப்பீட்டிலும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,94,200/- மதிப்பீட்டிலும், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.58,840/- மதிப்பீட்டிலும் என 38 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.22,35,920/- மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் பொது நிதி திட்டத்தின்கீழ் 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,21,200/- மதிப்பீட்டில் நவீன செயற்கை கால்களையும் என மொத்தம் 52 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24,57,120/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபானி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஆர்.பாலசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.